**செய்தி வெளியீட்டு எண். 711** **நாள் : 25/08/2010**

## அங்கன்வாடி மையங்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழக மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதே தமிழக அரசின் தலையாய நோக்கமாகும். குடியிருப்புகள் மட்டுமல்லாது பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து அரசு பள்ளிகளிலும் சுத்திகரிப்பு கலன்களை நிறுவ மத்திய அரசு ஜல்மானி திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தினை தமிழகத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, 2009–10 ஆம் ஆண்டில் 2074 ஊரகப் பள்ளிகளில் ரூ.4.14 கோடி செலவினத்தில் சுத்திகரிப்பு கலன்கள் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இதன் தொடர்ச்சியாக, 2010–2011ஆம் ஆண்டில், தமிழகத்தில் 6426 ஊரகப் பள்ளிகளில் சுத்திகரிப்பு கலன்கள் அமைக்க ரூபாய் 12.85 கோடி நிதியுதவி அளித்துள்ளது. அதில் இதுவரை 2134 பள்ளிகளில் ரூபாய் 4.20 கோடி செலவில் சுத்திகரிப்பு கலன்கள் நிறுவப்பட்டுள்ளது.

மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை (DST), சிப்பெட் (CIPET) நிறுவனத்துடன் இணைந்து குறைந்த செலவில் பராமரிக்க எளிதான டெராபில் குடிநீர் வடிகலன்களை வடிவமைக்க சீரிய முயற்சி மேற்கொண்டது. இவ்வகை வடிகலன் மின்சாரம் இன்றியும், சாதாரண குடிமக்களும் எளிதில் பராமரிக்க ஏற்ற ஒன்றாகும்.

கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்று ஆதாரங்களிலிருந்து பெறப்படும் நீரில் அதிகளவில் நிரம்பியுள்ள வீழ்படிவுகள், நுண்துகள்கள், இரும்பு தாதுக்கள் மற்றும் நுண்கிருமிகள் இவ்வடிகலன்கள் மூலம் வடிகட்டப்பட்டு சுத்தமான குடிநீர் கிடைக்கப் பெறுகிறது. இவ்வடிகலன்களில் பயன்படுத்தப்படும் வடிதகடுகள் இயற்கை பொருட்களான சிவப்பு களிமன், மணல், மரத்தூள் ஆகியவற்றை சரிவிகிதத்தில் பயன்படுத்தி உலையில் தேவையான வெப்பமூட்டி தயாரிக்கப்படுகிறது.

ஊரக பள்ளிகளில் வழங்கப்படுவது போன்று அங்கன்வாடிகளுக்கும் இத்தகைய சுத்திகரிப்பு கலன்கள் வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் தற்போது ரூபாய் 500 பெறுமானமுள்ள 30 லிட்டர் கொள்ளளவுள்ள டெராபில் வடிகலன்கள், சிப்பெட் நிறுவனம் மூலம் அங்கன்வாடி மையங்களுக்கு இலவசமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (25.08.2010) காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட 20 அங்கன்வாடி மையங்களுக்கு டெராபில் வடிகலன்களை இலவசமாக வழங்கினார்கள்.

முதற்கட்டமாக இந்நிதியாண்டில் தமிழகத்திலுள்ள 3000 அங்கன்வாடிகளில் டெராபில் வடிகலன்கள் நிறுவப்பட உள்ளன.

இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு. அசோக் வர்தன் ஷெட்டி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு. ககன்தீப் சிங் பேடி, கனிமங்கள் மற்றும் மூலப் பொருட்களின் பயிலகத்தின் ஆராய்சியாளர் திரு. குந்தியா, சிப்பெட் துணை இயக்குநர் டாக்டர். கொ.பழனிவேலு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மற்றும் சிப்பெட் உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.